பக்கங்கள் 13+5

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## மின் கம்ப இணைப்பு வயரில் தீ அதிர்ச்சியில் ஒருவர் உயிரிழப்பு

பூண்டுலோயாவில் சோகம்

(ஆ.ரமேஸ்)

பூண்டுலோயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சீன் தோட்ட மேல் பிரிவு தோட்டத்தில் அதிர்ச்சிக்கு உள்ளாகி தரையில் 04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 பங்குனி 06 செவ்வாய்க்கிழமை 19.03.2024 அதிர்வு 232




# வெடுக்குநாறிமலை விவகாரம்: நாடாளுமன்றத்தில் ஆர்ப்பாட்டம்

## சபை நடுவே வந்து தமிழ் எம்.பிக்கள் கோஷம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தும் ஆதரவுக் குரல்

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் மகா சிவராத்திரி தினத்தன்று கைது செய்யப்பட்ட 8 தமிழர்களையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியும், மத வழிபாட்டை உறுதி செய்யுமாறு கோரியும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று சபைக்குள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்றம் இன்று முற்பகல் 9.30 மணிக்குப் பிரதி சபாநாயகர் தலைமையில் கூடியது. இதன்போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆகியவற்றின் எம்.பிக்கள் சபை நடுவே வந்து, 04




## வெடுக்குநாறிமலையில் கைதான

# 8 பேரும் விடுதலை

# வழக்கும் தள்ளுபடி

## தமிழர்களின் தொடர் போராட்டத்துக்கு வெற்றி



(கே.வசந்தன்)

வெடுக்குநாறிமலை ஆலயத்தில் கைது செய்யப்பட்ட 8 பேரும் நீதிமன்றத்தால் இன்று விடுவிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு எதிரான வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது.

வவுனியா வடக்கு, வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கடந்த 8 ஆம் திகதி மகா சிவராத்திரி பூஜை வழிபாட்டில் தமிழர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது 04

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# வெடுக்குநாறிமலையில் கைதானவர்கள் விடுதலை






















# தமிழர்கள் மீதான அரச அடக்குமுறைகளுக்கு எதிராக யாழ். பல்கலை சமூகம் ஆர்ப்பாட்டம்!

**(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)**

தமிழர்கள் மீது மேற்கொள்ளப்படும் அரச அடக்குமுறைகளுக்கு எதிராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களால் பல்கலைக்கழக முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இன்று நண்பகல் 12 மணியளவில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெறும் அரச அடக்குமுறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, “சிங்கள பௌத்தமயமாக்கலை உடன் நிறுத்து”, “குருந்தூர்மலை எங்கள் சொத்து”, ”வெடுக்கு நாறிமலை எங்கள் சொத்து”, “மண் துறந்த புத்தருக்கு எங்கள் மண் மீது ஆசையா?”, “சர்வதேசமே காசாவும் இலங்கையும் வேறு வேறா?”, “பண்பாட்டு படுகொலையை உடன் நிறுத்து”, “திட்டமிட்ட கைதுகளை உடன் நிறுத்து” போன்ற கோஷங்களை மாணவர்கள் எழுப்பினர்.

இப் போராட்டத்தில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஊழியர் சங்கத்தினர், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.














# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து யாழ். பல்கலை ஊழியர் சங்கம் போராட்டம்




(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இன்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடளாவிய ரீதியில் உள்ள அரச பல்கலைக்கழகங்களில் இன்று வேலை நிறுத்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில், இன்று முற்பகல் 11.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழகம் மூன்றலில் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது பல்கலைக்கழக கல்விசாராப் பணியாளர்களின் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளுக்கு உரிய கால அவகாசங்கள் வழங்கப்பட்டும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் அரசும் இதுவரை தீர்வு வழங்காமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### 8 பேரும் விடுதலை...

அங்கு சப்பாத்துக்கால்களுடன் உட்புகுந்த பொலிஸார்,

வழிபாட்டில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டிருந்ததுடன் ஆலயப் பூசகர் உள்ளிட்ட 8 பேரைக் கைது செய்திருந்தனர்.

இவ்வாறு கைதான 8 பேரும் மறுநாள் 9 ஆம் திகதி வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

கடந்த 12 ஆம் திகதி வழக்கு மீள விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, 19 ஆம் திகதி (இன்று) வரை பொலிஸாரின் கோரிக்கைக்கு அமைய மேற்படி 8 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

விளக்கமறியலில் அவர்கள் வைக்கப்பட்டிருந்த நாட்களில் அவர்களின் விடுதலையை வலியுறுத்தி வடக்கு - கிழக்கில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இன்று மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது பொலிஸார் அவர்கள் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்கத் தவறிய காரணத்தால் வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டு 8 பேரும் விடுவிக்கப்பட்டனர்.

கைதானவர்கள் சார்பாக என்.சிறிகாந்தா, அன்ரன் புனிதநாயகம், க. சுகாஸ், தி.திருஅருள், அ.திலீப்குமார், நிவிதா, கிசான், தர்சா, நிதர்சன், கொன்சியஸ், சாருகேசி உள்ளிட்ட சட்டத்தரணிகள் பலர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

இதேவேளை, வெடுக்குநாறிமலையில் கைதான 8 பேரின் விடுதலையை வலியுறுத்தி நாடாளுமன்றத்தில் தமிழ் எம்.பிக்கள் இன்று காலை போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தப் போராட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் பங்கேற்று தனது எதிர்ப்பை வெளியிட்டிருந்தார்.

கைதானவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கை தொடர்பில் நீதி அமைச்சர் வழங்கிய வாக்குறுதியையடுத்து போராட்டம் நிறைவுக்கு வந்திருந்தது.

கைதானவர்களின் விடுதலையையடுத்து சபையில் உரையாற்றிய சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி., "எமது போராட்டத்தையடுத்து நீதிமன்றத்தால் 8 பேரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இது தமிழர்களுக்குக் கிடைத்த வெற்றி." - என்றார்.

### வெடுக்குநாறிமலை விவகாரம்...

பதாகைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சபை நடுவே வந்து இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ் எம்.பிக்கள், "நிறுத்து நிறுத்து இனவாதத்தை நிறுத்து", "நிறுத்து நிறுத்து மதவாதத்தை நிறுத்து", "பொலிஸ் அராஜகம் ஒழிக", "தொல்பொருள் திணைக்களத்தின் அராஜகம் ஒழிக", "பொய் வழக்கை வாபஸ் பெறு", "விடுதலை செய் விடுதலை செய் கைதான அப்பாவிகள் 8 பேரையும் விடுதலை செய்", "தொல்பொருள் அமைச்சரே பதவி விலகு", "வெடுக்குநாறிமலை எங்கள் சொத்து", "குருந்தூர்மலை எங்கள் சொத்து", "மயிலத்தமடு எங்கள் சொத்து" போன்ற கோஷங்களை எழுப்பினர்.

இதன்போது, "வெடுக்குநாறிமலையில் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுப்போம்" - என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ வாக்குறுதியளித்தார்.

"கைதான 8 பேரும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்" - என்று நீதி அமைச்சரிடம் தெரிவித்த தமிழ் எம்.பிக்கள், போராட்டத்தையும் நிறுத்திக் கொண்டனர்.

### மின்கம்ப இணைப்பு...

வீழ்ந்த நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தான் வசிக்கும் இலக்கம் நான்கு தொடர் குடியிருப்பு வீட்டுப் பகுதியில் தனது கண்முன்னே மின் கம்பத்தில் திடீரென மின் இணைப்பு வயர்கள் தீப்பிடித்து எரிவதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்த நபர் திடீரென தரையில் வீழ்ந்து உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சுப்பையா சண்முகம் (வயது 58) என்பவர் உயிரிழந்துள்ளார் என்று விசாரணைகளை மேற்கொண்டு வரும் பூண்டுலோயா பொலிஸார் தெரிவித்தனர்.

அதேநேரத்தில் சீன் மேல் பிரிவு தோட்டத்தில் அடிக்கடி மின் இணைப்பு வயர்கள் தீப்பிடிக்கின்றன என்று தெரிவிக்கும் தோட்ட மக்கள், இந்தத் தோட்டத்தில் தொடர் குடியிருப்புகள் அருகில் காணப்படும் மின் கம்பங்களில் மின் கசிவுகள் மற்றும் இணைப்பு வயர்கள் தொடர்பில் இலங்கை மின்சார சபை பிராந்திய தொழிநுட்ப அதிகாரிகள் பார்வையிட்டு சீர்த்திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# சீருடைகள், புத்தகங்கள் கிடைக்காவிடின் அறிவிக்குமாறு கல்வி அமைச்சு அறிவிப்பு

சீருடைகள், புத்தகங்கள் கிடைக்காவிடின் தமக்கு அறிவிக்குமாறு கல்வி அமைச்சு நாடளாவிய ரீதியிலுள்ள பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அத்துடன் அவை தொடர்பில் தொடர்பு கொள்வதற்கு விசேட தொலைபேசி இலக்கங்களை அமைச்சு வெளியிட்டுள்ளது.

அதன்படி கீழ்காணும் தொலைபேசி இலக்கங்கள் மற்றும் மின்னஞ்சல் ஊடாக அறிவிக்குமாறு கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

புத்தகங்கள்: தொலைபேசி: 0112784815, 0112785306, தொலைநகல்: 0112784815 மின்னஞ்சல்: epddistribution2024@gmail.com.

சீருடைகள்: தொலைபேசி: 0112785573, தொலைநகல்: 0112785573, மின்னஞ்சல்: schoolupplymoe@gmail.com.



## போதைப் பொருள் பைக்கெட்டுகளுடன் காத்தான்குடியில் ஒருவர் கைதானார்!

காத்தான்குடியில் யுக்திய போதை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போது 735 போதைப்பொருள் பக்கெட்டுக்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் 35 வயதுடையவர் என்று காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜி.கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

வாகனமொன்றில் போதைப் பொருள் லேகியம் எடுத்து வரப்பட்ட போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், கைது செய்யப்பட்டவர் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார் என்றும் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கடந்த இரு நாள்களில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது ஐஸ், ஹெரோயின் மற்றும் கேரளா கஞ்சாவுடன் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



## பண்டிகைக் காலத்தை முன்னிட்டு இந்திய முட்டைகள் இறக்குமதி!

எதிர்வரும் பண்டிகை காலத்தை முன்னிட்டு இந்தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதன்படி, இந்தியாவில் இருந்து ஏப்ரல் மாதத்தில் 42 மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

இந்த நிலையில் இறக்குமதி செய்யப்படும் முட்டைகளை உள்நாட்டு முட்டைகள் என்று விற்பனை செய்யும் மோசடி இடம்பெறுகிறது என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் அண்மையில் விவசாய அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தின் போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டைகளில் இடப்பட்டுள்ள முத்திரையை அழித்து உள்நாட்டு முட்டைகள் என்று விற்பனை செய்யும் மோசடி இடம்பெறுகிறது என்று உள்நாட்டு முட்டை வியாபாரிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சிவநீதி நிலைக்கும்!

வவுனியா மாவட்டம் வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தின் வழிபாட்டு உரிமை தொடர்பாக பேரின வாதம் முன்னெடுத்த அடக்குமுறை அராஜகம் நீதிமன்றத்தின் மூலம் கட்டுப் படுத்தப்பட்டிருக்கின்றது.

இது போன்ற பல பிரச்சினைகளில் ஒன்றுக்கு இப்போது தற்காலிக தீர்வு இந்த வடிவத்தில் கிடைத்திருக்கிறது. இது நிரந்தரமான - நிலைத்த - நீடித்த - தீர்வு அல்ல என்பதை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

சிவ நாமம் ஓதி, சைவ மத வழி பாட்டை முன்னெடுத்த குற்றத்துக்காக மட்டுமே பத்து நாள்கள் விளக்கமறி யலில் வைக்கப்பட்டிருந்த நம் தமிழ் சகோதரர்கள் எட்டு பேரின் தடுப்பு காவல் தொல்லைக்கு ஒரு முடிவு வந் திருக்கின்றது. அவ்வளவே.

பொலிஸார் தொடுத்த போலிக் குற்றச் சாட்டு வழக்கு நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது, ஆகவே பிரச்சினை தீர்ந்தது என்று நாம் ஒதுங்கிப் போய் விட முடியாது போய் விடக் கூடாது.

அதிகாரத்தில் இருப்போர் பேரினவாத வெறிப்போக்கோடும், மேலாண்மைத் திமிரோடும் நடந்து கொண்டால், அது தொடர்பில் சட்ட ரீதியான பாடம் உரிய முறையில் போதிக்கப்படும் என்ற யதார்த்தத்தை அவர்களுக்குக் காட்டமாக - உறைப்பாக - உணர்த்தக் கூடிய விதத் தில் நடவடிக்கைகள் ஆக்கபூர்வமாக எடுக்கப்பட வேண்டும்.

கடந்த சிவராத்திரி தினத்தன்று தமது மரபுவழி வழிபாட்டிடமான வெடுக்கு நாறிமலை ஆதி லிங்கேஸ்வரர் ஆல யத்தில் சைவ வழிபாட்டில் ஈடுபட்டிருந்த பக்தர்கள் மீது, தொல்லியல் திணைக்களத் தின் வழிகாட்டுதலில் செயற்பட்ட பொலிஸார் அடாவடித்தனமாக - அட்டூழியப்போக்கில் - அராஜகமாக - நடந்து கொண்டனர்.

அது பற்றிய வீடியோ பதிவுகள், படங்கள், ஆதாரங்கள், சாட்சியங்கள் யாவும் தமிழர் வசம் தாராளமாக உள்ளன.

அந்த அட்டூழிய நடவடிக்கையில் சிக்கிக்கொண்ட எட்டு அப்பாவி சைவ மக்களை சட்டரீதியாக மாட்டிவிடும் பேரினவாதத்தின் முதல் கட்ட அராஜகம் - சூழ்ச்சித் தந்திரம் - இன்று சட்ட வாதாட்டம் மூலம் முறியடிக்கப்பட்டு இருக்கின்றது.

இனி, இவ்விடயத்தில் அடுத்த கட்ட மாக என்ன செய்ய வேண்டும் என்பதை தீர்மானித்து, அதனைத் தமிழர் தரப்பு முன்னெடுக்க வேண்டும்.

அடுத்த கட்டம் இரண்டு விதமாக கையாளப்பட வேண்டும் கையாளப்பட முடியும்.

ஒன்று - சட்ட ரீதியாக முன்னெடுக்கப் பட வேண்டியது.

மற்றது - அரசியல் ரீதியில், வெகுஜனப் பங்குபற்றுதலுடன் மேற்கொள்ளப்பட வேண்டியது.

தமிழர் தேசத்தை - அதன் மரபு வழி வந்த தனித்துவத்தை - சிதைத்தழித்து, பௌத்த - சிங்கள பேரினவாத ஆக்கி ரமிப்புக்குள் முடக்கி, கபளீகரம் செய்யும் தென்னிலங்கை அரசாங்கத்தின் திட்ட மிட்ட அராஜக நடவடிக்கையின் ஓர் அங்கம்தான் வெடுக்குநாறிமலையிலும், குறுந்தூர்மலையிலும், தென்னமரவாடி போன்ற இடங்களிலும் அரங்கேறு கின்றது என்பதை சட்ட ரீதியாக நிரூ பிப்பதில் தமிழர் தரப்பு தொடர்ந்து முனைப்புடன் இருக்க வேண்டும்.

வெடுக்குநாறிமலையில் இடம் பெற்ற அராஜகம் தொடர்பில் மேனிலை நீதி மன்றங்களில் உரிய ஆதாரங்கள், சாட்சி யங்களோடு நியாயம் கோர வேண்டும். சிவராத்திரி பூசையை நிந்தனை செய்யும் விதத்தில் மோசமாக நடந்த பொலி ஸார், அவர்களைத் தூண்டி வழிப்படுத் திய தொல்பொருள் திணைக்கள அதி காரபீடம் போன்ற தரப்புகளை எல் லாம் சட்டத்தின் மூலம், பகிரங்க வெளி யில் அம்பலப்படுத்த தளராத ஒரு சட்டப் போராட்டம் தேவை. வெறுமனே இத்த கைய ஆக்கிரமிப்பு - அடாவடி - சம்பவங்கள் நடக்கும் போது மட்டும் ஒன்று கூடி ஆர்ப்பாட்டம் நடத்தி, கலைந்து விடுவதுடன் அடங்கி விடக் கூடாது.

இந்த எண்மரையும் விடுவிக்கக் காட் டிய எழுச்சி போன்ற வெளிப்பாடு, சட்ட ரீதியில் இத்தகைய அராஜகங்களுக்குக் காரணமான குற்றவாளிகளைக் கூண்டில் ஏற்றித் தண்டனை வாங்கி கொடுப்ப திலும் - பொறுப்புக் கூற வைப்பதிலும் - முழுமையாகக் காட்டப்பட வேண்டும்.

அதேவேளை இதே போன்ற அராஜகத் தைத்தான் தமிழர் தேசமெங்கும் பௌத்த - சிங்கள பேரினவாத ஆட்சி பீடம் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது என்ற உண்மையை பெரும் பிரச்சாரமாக தென்னிலங்கைக்கும் சர்வதேசத்திற்கும் நாம் எடுத்துரைத்து வெளிக்காட்ட வேண்டும்.

இன்று காலை நாடாளுமன்றத்தில் தமிழ் எம்.பிக்கள் நடத்திய போராட்டம் இந்த வகையில் முக்கியத்துவமானது. அதற்கு நேரடியாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆதரவு தந் தமை முக்கிய திருப்பமாகும்.

சிவநீதி நிலைக்கும் என்று நம்பு வோமாக!




# பாதாள உலகச் செயற்பாடுகளை கட்டுப்படுத்த விசேட பொலிஸ் குழு!

பாதாள உலகச் செயற்பாடுகளை ஒடுக்குவதற்காக 20 விசேட பொலிஸ் குழுக்களை அமைப்பதற்கு பொலிஸ்மா அதிபர் தேஷபந்து தென்னகோன் நடவடிக்கை எடுத்துள்ளார் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் நடைபெற்று வரும் யுக்திய நடவடிக்கைகளுக்குச் சமாந்தரமாக இன்று (19) முதல் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய 20 குழுக்களும் தற்போது செயற்படும் ஒவ்வொரு பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படவுள்ளன.

ஒவ்வொரு குழுவிலும் குற்றப் பிரிவு நிலைய பொறுப்பதிகாரி ஒருவரும், 04 புலனாய்வு அதிகாரிகள், 02 விசேட அதிரடிப்படை அதிகாரிகள் உட்பட 09 அதிகாரிகள் அடங்குகின்றனர்.

கடந்த சில வாரங்களாக மேல் மற்றும் தென் மாகாணங்களில் இடம்பெற்று வரும் பாதாள உலக செயற்பாடுகளை கருத்தில் கொண்டு பொலிஸ் மா அதிபர் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார் என்று பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது.

# ஜப்பான் தூதரைச் சந்தித்துள்ளார் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்!



**(கற்பிட்டி சியாஜ்)**


இலங்கைக்கான ஜப்பானின் தூதுவர் மிசூகோஷி ஹிடெகி தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்கவுக்கு இடையிலான சந்திப்பு இன்றைய தினம் (19) முற்பகல் மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது ஜப்பான் தூதரகத்தின் பதில் பிரதானி கற்சுகி கொற்றாரோ, இரண்டாம்நிலை செயலாளர் திருமதி இமாய் கயோரி, தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் விஜித ஹேரத் ஆகியோர் இணைந்து கொண்டனர்.

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் நிலவரம் தொடர்பில் இருதரப்பும் விரிவாக கலந்துரையாடியது. எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் பற்றியும் கவனம் செலுத்தப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் இடையீடுகள் பற்றிய தேசிய மக்கள் சக்தியின் நிலைப்பாடு தொடர்பிலும் ஜப்பானின் இராஜதந்திர பிரதிநிதிகளிடம் தெளிவுப்படுத்தப்பட்டது. எதிர்காலத்தில் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு ஜப்பான் தயாராகவுள்ளது என்று இதன்போது ஜப்பான் பிரதிநிதிகள் மூலமாக எடுத்துரைக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.





# இந்தியத் தேர்தல் முடிவடைந்த பின்னரே எட்கா ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட முடிவு!

## நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவிப்பு

இந்திய பொதுத் தேர்தல் நிறைவு பெற்றதன் பின்னர் இந்தியாவுடனான எட்கா ஒப்பந்தத்தை கைச்சாத்திட அரசு உத்தேசித்துள்ளது என்று பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

இதேவேளை வெளிநாடுகளுடனான ஒப்பந்தங்களுக்காக நடைமுறைக்கு சாத்தியமான வகையில் சட்டங்கள் இயற்றப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் அலுவலகத்தில் நேற்று (18) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான எட்கா ஒப்பந்தம் இந்த மாதம் கைச்சாத்திடப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த நிலையில் அது பிற்போடப்பட்டுள்ளது. இந்தியப் பொதுத் தேர்தல் நிறைவு பெற்றதன் பின்னர் எட்கா ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட அரசு உத்தேசித்துள்ளது.

வெளிநாடுகளுடனான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும் போது எவ்விதமான முறையான வழிமுறைகளும் தற்போது பின்பற்றப்படுவதில்லை. ஆகவே எட்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் நான்கு பிரதான நிபந்தனைகளை அரசு நிறைவேற்ற வேண்டும்.

முதலாவது இலங்கைக்கு வெளிநாட்டு வர்த்தக ஒப்பந்த கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும். 2016 ஆம் ஆண்டு சிங்கப்பூர் நாட்டுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்திடும் போது அரசிடம் இதனைக் குறிப்பிட்டோம். ஆனால் அரசு அதைக் கவனத்தில் கொள்ளவில்லை.

குறித்த ஒரு ஒப்பந்தத்தில் இலங்கைக்கு அனுகூலம் எது, பிரதிகூலம் எது என்பதை அடையாளப்படுத்த ஒரு வழிமுறை வேண்டும். அவ்வாறான வழிமுறைகள் எதுவும் இல்லாமல் வர்த்தக ஒப்பந்தங்களுக்குச் சென்றால் எதிர்மறையான தாக்கங்கள் மாத்திரமே ஏற்படும்.

இரண்டாவது வெளிநாட்டு வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு உரிய சட்டங்கள் நடைமுறையில் இல்லை. ஆகவே வெளிநாடுகளுடனான ஒப்பந்தங்களுக்காக நடைமுறைக்குச் சாத்தியமான வகையில் சட்டங்கள் இயற்றப்பட வேண்டும்.

மூன்றாவது ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுதற்கு ஒரு மாதத்துக்கு முன்னர் ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் பகிரங்கப்படுத்தப்பட்டு, நாடாளுமன்றத்தில் இரு நாள் விவாதம் நடத்தப்பட வேண்டும். அப்போதுதான் ஒப்பந்தத்தின் உண்மைத் தன்மை வெளிப்படும்.

1998 ஆம் ஆண்டு இந்தியாவுடன் முதலாவது சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து சிங்கப்பூர், பாகிஸ்தான், தாய்லாந்து ஆகிய நாடுகளுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இந்த ஒப்பந்தங்களால் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள பயன் தொடர்பில் நாடாளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட நான்கு நிபந்தனைகளையும் பின்பற்றாமல் எட்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால் அது இலங்கைக்கு எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும்.

ஆகவே நாட்டுக்கு எதிரான ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட அரசுக்கு உரிமையில்லை என்பதை ஆட்சியாளர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.– என்றார்.

# ஐஸ் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்த பெண் ஒருவர் கைது!

களனி, பெத்தியகொட பிரதேசத்தில் நீண்ட காலமாக ஐஸ் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கமைய, மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பெத்தியகொட பிரதேசத்தை சேர்ந்த 30 வயதுடையவர் என்று பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரிடம் இருந்து 25 கிராம் 820 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள், டிஜிட்டல் தராசு மற்றும் 2 லட்சம் ரூபா பணம் என்பவற்றைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பேலியகொட பொலிஸ் நிலைய அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.






### பெண்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில்

# விலங்கு, தீவன உற்பத்தி மையம் திருகோணமலையில் திறந்து வைப்பு

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை – ரொட்டவெவ கிராமத்தில் விலங்கு தீவன தயாரிப்பு மற்றும் விலங்கு உற்பத்தி மையம் திருகோணமலை மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சியால் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இலங்கை முழுவதும் முன்னெடுக்கப்பட்டுவரும் இந்தத் திட்டத்தின் நிறைவு நாள் நிகழ்வும் மக்களிடம் கையளிக்கும் நிகழ்வும் இன்று இடம் பெற்றுள்ளது என்று ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தின் ஆலோசகர் கலாநிதி கீதிகா தெரிவித்தார்.

கிராமத்தில் வாழ்ந்து வரும் பெண்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் கோழி வளர்ப்பு போன்றவற்றை ஊக்குவித்து இந்த நிலையத்தின் ஊடாகத் தொழில் வாய்ப்புகளை வழங்கிப் பெண்களை அடிமைத்தனத்திலிருந்து மேம்படுத்தும் நோக்கிலேயே இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்று இதன்போது அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் இங்கே முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்கள் மூலம் பெறப்படும் உற்பத்திப் பொருள்களை வெளிநாடுகளுக்கு கொண்டு செல்வதற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மொரவெவ பிரதேச செயலாளர் மற்றும் யு.என்.டி.பி. அதிகாரிகள், கிராம மக்கள் பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.






# மத்திய அரசை கண்டித்து இராமேஸ்வரத்தில் கடலில் இறங்கி திருவோடு ஏந்தி போராட்டம்

இலங்கை கடற்படையின் தொடர் கைது நடவடிக்கையை தடுக்க தவறிய மத்திய அரசை கண்டித்து எதிர்வரும் 26 ஆம் திகதி கடலில் இறங்கி, திரு வோடு ஏந்தி இராமேஸ்வரம் மீனவர்கள் போராட்டம் நடத்த தீர்மானித்துள்ளனர்.

இராமேஸ்வரம் மீன்பிடி துறை முகத்தில் இருந்து கடந்த சனிக்கிழமை மீன் பிடிக்கச் சென்ற இரண்டு படங் களையும் அதிலிருந்த 21 மீனவர்க ளையும் எல்லை மீன் தாண்டி மீன் பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் இலங்கை கடற்படையினர் கைது செய்து யாழ்ப்பாணம் சிறையில் அடைத் துள்ளனர்.

இதையடுத்து இராமேஸ்வரம் விசைப்படகு மீனவ சங்க பிரதிநிதிகள் மற்றும் மீனவர்கள் இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் நேற்று அவசர ஆலோசனை கூட்டம் நடத்தினர்.

அந்தக் கூட்டத்தின்போது, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட



21 மீனவர்களை உடனடியாக படகுடன் விடுதலை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

அத்துடன், இலங்கை கடற்படையின் தொடர் கைது நடவடிக்கையை தடுக்க தவறிய மத்திய அரசை கண்டித்து எதிர்வரும் 26 ஆம் திகதி இராமேஸ்வரம் மீன்பிடி, அனுமதி சீட்டு வழங்கும் அலுவலகத்தில் இருந்து மீனவர்கள் பேரணியாக சென்று கடலில் இறங்கி திருவோடு ஏந்தி ஆர்ப்பாட்டம் நடத்தவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மீன்பிடி தடைக்காலம் அறிவிக்க இன்னும் ஒரு மாத காலமே உள்ள நிலையில் இலங்கை சிறையில் உள்ள மீனவர்களை படகுடன் உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கைது நடவடிக்கை நடைபெறாமல் இரு நாட்டு அரசுகளும் உடனடியாக பேச்சு நடத்த வேண்டும் எனவும் மீனவர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

# ஓ.பன்னீர்செல்வம் இரட்டை இலை சின்னத்தை பயன்படுத்த நிரந்தர தடை

அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் பெயர், கட்சிக் கொடி, இரட்டை இலை சின்னம், கடிதத் தலைப்பு ஆகியனவற்றை முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அவரது அணியினர் பயன்படுத்த நிரந்தர தடை விதித்து சென்னை மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வத்திற்கு எதிராக மனு வொன்றை தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு மீதான விசாரணை அண்மையில் நிறை வடைந்த நிலையில், நேற்று தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கு விசாரணையின்போது, ஓ.பன்னீர்செல்வம் தரப்பில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பொதுக்குழு தொடர்பான இடைக்கால கோரிக்கையை சென்னை மேல் நீதிமன்றம் நிராகரித்தது.

அத்துடன், கழகத்தின் பெயர், கட்சிக் கொடி, இரட்டை இலை சின்னம், கடிதத் தலைப்பு ஆகியனவற்றை பயன்



படுத்தவும் அவருக்கு நிரந்தர தடை விதிக்கப்பட்டது.

எதிர்வரும் தேர்தலின் போது, இரட்டை இலை சின்னத்தை பயன்படுத்தி, பாரதீய ஜனதா கட்சிக்கு ஆதரவளிக்கவுள்ளதாக ஓ.பன்னீர்செல்வம் அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.





# பா.ஜ.க. கூட்டணியில் பா.ம.க. பத்து தொகுதிகளில் போட்டி

## ஒப்பந்தம் கையெழுத்து

மக்களைவத் தேர்தலில் கூட்டணி அமைப்பதற்காக பா.ஜ.க. – பா.ம.க. இடையிலான ஒப்பந்தம் இன்று கையெழுத்தானது. இதில் பா.ம.க.வுக்கு 10 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

பா.ம.க. – பா.ஜ.க. இடையிலான கூட்டணி குறித்து இறுதி முடிவை எடுப்பதற்காக திண்டிவனம் தைலாபுரம் தோட்டத்தில் பா.ம.க. உயர்நிலை குழு ஆலோசனை கூட்டம் நேற்று மாலை நடந்தது.

கட்சி நிறுவனர் ராமதாஸ் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் தலைவர் அன்புமணி, கௌரவ தலைவர் ஜி.கே.மணி, பொதுச் செயலாளர் வடிவேல் ராவணன், பொருளாளர் திலகபாமா, வடக்கு மண்டல இணை பொதுச் செயலாளர் ஏ.கே.மூர்த்தி,வழக்கறிஞர் கே.பாலு உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

இதில், தீவிர ஆலோசனைக்கு பின்னர், பா.ஜ.கவுடன் கூட்டணி அமைத்து மக்களவை தேர்தலை சந்திக்க முடிவு செய்யப்பட்டது.

இந்த நிலையில், இன்று காலை தைலாபுரம் தோட்டத்தில் உள்ள ராமதாஸ் இல்லத்துக்கு பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை, மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் உள்ளிட்டோர் வருகை தந்தனர்.

இரு தரப்பினருக்கும் இடையே நடந்த ஆலோசனையில் முடிவில் பா.ஜ.க. – பா.ம.க. இடையிலான கூட்டணி தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்தானது. இதில் 10 தொகுதிகள் பா.ம.கவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்புக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அன்புமணி ராமதாஸ்,

“10 ஆண்டு காலமாக பாட்டாளி மக்கள் கட்சி டில்லியில் தேசிய ஜனநாயக கூட்டணியின் அங்கமாக இருந்து வருகிறது. எதிர்வரும் மக்களவைத் தேர்தலை தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியுடன் இணைந்து சந்திக்க கட்சி முடிவு செய்திருக்கிறது. பிரதமர் நரேந்திர மோடியின் நல்லாட்சி தொடரவும், தமிழ்நாட்டில் மாற்றங்கள் வருவதற்காகவும் நாங்கள் இந்த முடிவை எடுத்துள்ளோம். 60 ஆண்டுகளாக தமிழகத்தை ஆட்சி செய்து கொண்டிருப்பவர்கள் மீது மக்களுக்கு வெறுப்பான சூழல் இருக்கிறது. ஒரு மாற்றம் வரவேண்டும் என்ற எண்ணம் மக்கள் மனதில் ஆழமாக இருக்கிறது. அதை பூர்த்தி செய்யவே இந்த முடிவை நாங்கள் எடுத்துள்ளோம்.

எங்கள் கூட்டணி, தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், இந்தியா முழுக்க மிகப்பெரிய வெற்றி பெறும். பிரதமர் மோடி மூன்றாவது முறையாக இந்தியாவின் பிரதமராக நிச்சயமாக தேர்ந்தெடுக்கப்படுவார்.” – என்றார்.

இந்த சந்திப்புக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை,

“தமிழகத்தின் மக்கள் சக்தியாக, தனிப்பெரும் அரசியல் இயக்கமாக இருக்கும் பாட்டாளி மக்கள் கட்சி மிக முக்கியமான ஒரு முடிவை எடுத்து பிரதமர் மோடியின் கரத்தை வலுப்படுத்தியிருக்கிறது. மக்களவை தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி 400 இற்கும் அதிகமான ஆசனங்களில் வெற்றிபெற வேண்டும் என்று ஒரு வேள்வியுடன் பாமக களமிறங்கியிருக்கிறது.

தமிழகத்தின், இந்தியாவின் தனிப்பெரும் அரசியல் தலைவராக திகழும் ராமதாஸுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். பிரதமர் மோடி, முன்னாள் பிரதமர் வாஜ்பாய் உள்ளிட்ட பா.ஜ.க. மூத்த தலைவர்களின் அன்பை பெற்றவர் ராமதாஸ். தமிழகத்தில் புரட்சிகரமான அரசியல் மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும் என்பது அவரது மிகப்பெரிய கனவு.

இராமதாஸ் யோசித்துக் கொண்டிருக்கும் பல விஷயங்களை பிரதமர் மோடி நாடு முழுவதும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார். 2024 மக்களவை தேர்தலில் மக்கள் வெற்றியை கொடுப்பார்கள் என்ற முழு நம்பிக்கையுடன் களத்தில் இறங்கியிருக்கிறோம். தமிழகத்தின் அரசியல் நேற்று இரவில் இருந்து மாறியிருக்கிறது. பாட்டாளி மக்கள் கட்சி எடுத்துள்ள இந்த முடிவு தமிழக அரசியலை முற்றிலுமாக மாற்றி இருக்கிறது.

2024 இல் மாபெரும் வெற்றி, 2026இல் நாம் அனைவரும் எதிர்பார்க்கும் அரசியல் மாற்றம். நாங்கள் இரவோடு இரவாக கோவையிலிருந்து இங்கு வந்ததற்கு காரணம், இன்று சேலத்தில் பிரதமர் மோடியுடன் ராமதாஸை அமரவைத்து அழகு பார்க்க வேண்டும் என்ற ஆசைதான்.” – என்றார்.

எந்தெந்த தொகுதிகள், வேட்பாளர்கள் யார் என்ற தகவல்கள் விரைவில் அறிவிக்கப்படும் என்று கூறப்படுகிறது. பா.ஜ.க. – பா.ம.க. கூட்டணி உறுதியாகி உள்ள நிலையில், சேலத்தில் பிரதமர் மோடி இன்று பங்கேற்கும் பிரச்சார பொதுக்கூட்டத்தில் அன்புமணியும் பங்கேற்கிறார்.

முன்னதாக, தமிழகத்தின் வட மாவட்டங்களில் கணிசமான வாக்கு வங்கி வைத்துள்ள பா.ம.கவை தங்கள் கூட்டணியில் சேர்க்க அ.தி.மு.கவும், பா.ஜ.கவும் தீவிர முயற்சி மேற்கொண்டன.

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் பா.ம.க.வுடன் பேச்சு நடத்தி, கடந்த முறை போலவே 7 தொகுதிகள் மற்றும் ஒரு மாநிலங்களவை உறுப்பினர் பதவி கொடுப்பதாக உறுதி அளித்தனர்.

இதற்கிடையே, அன்புமணியிடம் பேச்சு நடத்திய பா.ஜ.க. மேலிட பொறுப்பாளர்களான வி.கே.சிங், கிஷன் ரெட்டி உள்ளிட்டோர் 10 தொகுதிகள் மற்றும் ஒரு மாநிலங்களவை உறுப்பினர் பதவி கொடுப்பதாகவும், மீண்டும் ஆட்சி அமைந்த பிறகு மத்திய அமைச்சர் பதவி பற்றி பேசி முடிவு செய்வதாகவும் உறுதி அளித்தனர்.

இரு தரப்பிலும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்ட நிலையில், பா.ம.க. எந்த பக்கம் நகரும் என்பது எதிர்பார்ப்பை ஏற்படுத்திய நிலையில், இப்போது பா.ஜ.க. – பா.ம.க. இடையே கூட்டணி ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.



# காசாவில் அதிகரிக்கும் பட்டினி மரணங்கள்

## ஐ.நா எச்சரிக்கை

காசா பகுதியில் உணவுப்பற்றாக் குறை காரணமாக அதிகளவு இறப்புகள் நிகழக்கூடும் எனவும் யுத்த நிறுத்த உடன்படிக்கை ஏற்படாத காரணத்தினால் பாதிப்புகள் இன்னும் அதிகமாகலாம் என்றும் ஐ.நா எச்சரிக்கை விடுத்துள்ளது.

உலகளாவிய பட்டினி கண்காணிப் பகம் இதனைத் தெரிவித்துள்ளது.

மேற்படி பகுதியில் பஞ்சம் நிலவு வதாகவும் பாரியளவில் உணவு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் அந்த அமைப்பு அபாய அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் ஒன்றிணைந்த உணவு பாதுகாப்பு அமைப்பு தெரிவிக்கையில், வடக்கு காசாவில் 70 வீதமான மக்களுக்கு உணவு இல்லை எனவும், இது 20 வீத பட்டினி அதிகரிப்பு என்றும் சுட்டிக் காட்டியுள்ளது.





## சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி:

# பொது வெளியில் தோன்றினார் இளவரசி கேட் மிடில்டன்

பிரித்தானிய இளவரசி கேட் மிடில்டன் பொது வெளியில் தோன்றி, சர்ச்சை களுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

பிரித்தானிய வேல்ஸ் இளவரசி கேட் மிடில்டன், வயிற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டதன் பின்னர், பொது வெளியில் தோன்றாமை பல சர்ச்சை களை ஏற்படுத்தியிருந்தது.

இதனைதொடர்ந்து அவர் ஓய்வெ டுத்து வருகின்றார் என்றும் விரைவில் பொது வெளியில் தோன்றுவார் எனவும் செய்திகள் வெளியாகின.

எனினும், கிறிஸ்மஸ் பண்டிகைக்கு பிறகு வேல்ஸ் இளவரசி பொதுவெளியில்



தோன்றாமையினால் பல வதந்திகள் எழுந்தன.

அத்துடன் சமீபத்தில் அன்னையர் தினத்தில் இளவரசர் வில்லியம் தவிர்த்து, குழந்தைகளுடன் கேட் மிடில டன் இருக்கும் புகைப்படம் ஒன்றை கென்சிங்டன் அரண்மனை வெளியிட்டது.

இந்தப் புகைப்படமும் பொது வெளி யில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், வேல்ஸ் இளவரசி கேட் மிடில்டன் இளவரசர் வில்லியமுடன் பண்ணை கடை ஒன்றுக்கு சென்ற காட்சிகள் வெளியாகியுள்ளன.

அதனடிப்படையில், இளவரசி கேட் மிடில்டன் மற்றும் இளவரசர் வில்லியம் விண்ட்சர் இருவரும் அடிலைடு காட்டேஜ் அருகில் உள்ள பண்ணைக் கடைக்கு சென்றுள்ளனர்.

இதற்கு முன்னதாக, அவர்களது குழந்தைகள் கலந்துகொண்ட விளை யாட்டு நிகழ்ச்சியிலும் அவர்கள் கலந்து கொண்டார் எனவும் கூறப்படுகிறது.



# வட கொரியாவிலிருந்து ரஷ்யாவிற்கு அனுப்பப்படும் அதிகளவு ஆயுதங்கள்

வட கொரியா கடந்த ஆண்டு முதல் ரஷ்யாவிற்கு சுமார் 7 ஆயிரம் கொள் கலன்கள் அடங்கிய வெடிபொருள்கள் மற்றும் ஏனைய இராணுவ உபகர ணங்களை அனுப்பியுள்ளதாக தென் கொரியா தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, தென் கொரியாவின் தேசிய பாதுகாப்பு அமைச்சர் ஷின் வோன்-சிக் கூறுகையில்,

“வடகொரியா கடந்த ஆண்டு முதல் வெடிமருந்துகள் மற்றும் பிற இராணுவ உபகரணங்கள் நிரப்பப்பட்ட சுமார் 7ஆயிரம் கொள்கலன்களை ரஷ்யா விற்கு அனுப்பியுள்ளது.

வடகொரியா நாட்டின் கிழக்கு கடற் பகுதியில் குறுகிய தூர ஏவுகணைகளை ஏவியது என்று தென் கொரிய இராணு வம் அறிவித்த பல மணிநேரங்களுக்குப் பிறகு தென் கொரியாவின் பாதுகாப்பு அமைச்சர் செய்தியாளர் சந்திப்பில் இதனை அறிவித்தார். இராணுவ ஆதரவிற்கு ஈடாக வடகொரியா 9,000 கொள்கலன்க ளுக்கு மேல் உதவியைப் பெற்றிருக்க லாம்.” - என்றார்.

வடகொரியா கப்பல்களை நம்பியி ருந்ததாகவும், ஆனால் தற்போது எல்லை தாண்டிய ஆயுத விநியோகத்திற் காக ரயில்களை அதிகளவில் பயன்படுத் துவதாகவும் அமைச்சர் ஷின் வோன்-சிக் மேலும் தெரிவித்தார்.



# ஆப்கானிஸ்தானில் நிலநடுக்கம்

ஆப்கானிஸ்தானில் இன்று காலை நிலநடுக்கமொன்று பதிவாகியுள்ளது.

குறித்த நிலநடுக்கமானது, உள்ளூர் நேரப்படி இன்று அதிகாலை 6 மணியளவில், ரிக்டர் அளவில் 5.3 ஆக பதிவானதாக புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் நகரின் தெற்கே- தென்மேற்கு திசையில் 632 கி.மீ தொலைவில் பாகிஸ்தா னையொட்டிய பலோசிஸ்தானின் நுஷ்கி பகுதியிலிருந்து 65 கி.மீ தொலைவிலும் நிலநடுக்கத்தின் மையப்பகுதி இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள் ளது.

10 கி.மீ ஆழத்தில் நிலநடுக்கத்தின் மையப்பகுதி இருந்ததால் சுற்றுவட்டார பகுதிகளில் பரவலாக நில அதிர்வு உணரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்ப டுகின்றது.

எனினும், பெரிதாக சேதம் ஏதும் ஏற்படவில்லை எனவும் அந்நாட்டு செய் திகள் தெரிவிக்கின்றன.

இதற்கு முன்னதாக கடந்த 17 ஆம் திகதி ஆப்கானிஸ்தானில் மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டமை குறிப்பிடத் தக்கது.

பக்கங்கள் 05

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 19/03/2024

## கார் திருட்டுச் சம்பவங்கள் டொரன்டோவில் அரிகரிப்பு

ஒன்ராரியோ,மார்ச்19

டொரன்டோவில் கார் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என டொரன்டோ பொலிஸ் பிரதான அதிகாரி மைரன் டெம்கிவ் C2



# பலஸ்தீனத்தை அங்கீகரிக்கும் தீர்மானம் கனடா நாடாளுமன்றில் நிறைவேறியது!

**ஒன்ராரியோ, மார்ச் 19**

**பலஸ்தீனத்தை தேசமாக அங்கீகரிப்பதற்கு மத்திய அரசாங்கத்தை கோரும் புதிய ஜன நாயகக் கட்சியின் பிரேரணை திருத்தங்களுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. கனடாவின் வெளியுறவுக் கொள்கைக்கு இசைவாக, பேரம்பேசப்பட்ட இரு தேச தீர்வின் அங்கமாக பலஸ்தீன தேசத்தின் உருவாக் கத்திற்காக செயற்றிறனுடன் செயற்படுவதற்கு கனடாவை வலியுறுத்தும் அடையாளப் பிரேரணையாக திருத்தப்பட்ட பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.**

பலஸ்தீனத்தை தேசமாக அங்கீகரிக் குமாறு லிபரல் கட்சியினைக் கோரும் பிரேரணை புதிய ஜனநாயகக் கட்சியி னால் சமர்பிக்கப்பட்டது.

ஆனாலும், கடைசி நிமிடத்தில், பிரே ரணைக்கான திருத்தம், பிரேரணையின் உறுதித்தன்மையை சற்று தளர்வடையச் செய்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், எதிர்க்கட்சியின் எதிர்ப்புக்கு மத்தியில் திருத்தமும், புதிய பிரேரணை யும் 204இற்கு 117 வாக்குகள் என்ற அடிப்படையில் நிறைவேற்றப்பட்டது.

# பலஸ்தீனம் பற்றிய கனடாவின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை

## வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜொலி தெரிவிப்பு

ஒன்ராரியோ,மார்ச்19

பலஸ்தீனம் தொடர்பான கனடாவின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படப் போவ தில்லை என வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜொலி தெரிவித்துள்ளார்.

பலஸ்தீனத்தை உத்தியோகப்பூர்வமாக ஒரு தேசமாக அங்கீகரிக்குமாறு புதிய ஜனநாயகக் கட்சியினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை தொடர்பில் கருத்து தெரிவித்த போதே வெளிவிவகார அமைச்சர் இதனைக் கூறினார்.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனம் ஆகிய வற்றுற்கு இடையில் இரு தேசங்கள் என்ற தீர்வினை கனடா தொடர்ந்தும் நம்புவதாக அமைச்சர் ஜொலி தெரிவித் துள்ளார். அண்மையில் மோதல் பிராந்தியத்திற்கான விஜயத்தின் போது, நீடித்த சமாதானத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பில் தாம் அதிக கவனம் செலுத்தி னார் என ஜொலி கூறியுள்ளார்.

# இஸ்ரேலுடன் சமாதானமாக வாழுகின்ற பலஸ்தீனத்தின் உருவாக்கம் கட்டாயம்!

## கனடா அமைச்சர் கெரி ஆனந்தசங்கரி வலியுறுத்து

ஒன்ராரியோ,மார்ச்19

இஸ்ரேலுடன் சமாதானமாக வாழும் பலஸ்தீன தேசத்தின் உருவாக்கம் இன்றி எதிர்காலத்திற்கான வழியில்லை என நாடாளுமன்ற உறுப்பினரும், மத்திய அரசாங்கத்தின் அமைச்சருமான கெரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற புதிய ஜனநாயகக் கட்சியின் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தன் பின்னர், சமூக ஊடகத்தில் இட்ட பதிவிலேயே கெரி ஆனந்தசங்கரி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இரு தேச தீர்வுக்கான கனடாவின் நம்பிக்கையை உறுதிபடுத்தும் கனடாவின் முயற்சியை உறுதிப்படுத்துவதாக இன்றைய வாக்களிப்பு அமைந்திருந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த பல வாரங்களாகவும், மாதங்களாகவும் போர் நிறுத்தத்திற்கும், காசாவிற்கான தடையற்ற மனிதநேய அணுகும் வசதியையும் தொடர்ந்து வலியுறுத்தி வந்ததாகவும், பணயக்கைதிகளை உடனடியாக விடுவிக்குமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் நிவாரண நிதியத்திற்கு கனடா உதவி வழங்கி வருவதாகவம், பலஸ்தீன அகதிகளை தொடர்ந்து வரவேற்று வருவதாகவும் தெரிவித்துள்ள அமைச்சர் கெரி, இந்த யுத்தம் முடிவுக்கு வர வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# மாநில கூடைப்பந்துப் போட்டிகளுக்கு தொழிலாளர் முரண்பாட்டால் பாதிப்பு!

## சசகெச்சுவானில் இந்த நிலைமை

ஒன்ராரியோ,மார்ச்19


சசகெச்சுவானில் அதிகரிக்கும் தொழிலாளர் முரண்பாட்டின் காரணமாக மாநில கூடைப்பந்துப் போட்டிகள் பாதிப்புக்கு உள்ளாகவுள்ளன.

இந்த விளையாட்டுப் போட்டிகள் பாதிக்கப்படுகின்றமை தொடர்பில் மாணவர்கள் விரக்தியை வெளியிட்டுள்ளனர்.

சசகெச்சுவான் மாநிலத்தின் 2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ள மார்ச் 20ஆம் திகதியே, சசகெச்சுவான் ஆசிரியர் சம்மேளனமும் வேலைநிறுத்தப் போராட்டத்தை திட்டமிட்டுள்ளது.

அத்துடன், வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மேலதிக செயற்பாடுகளில் கலந்துகொள்ளாதிருப்பதற்கும் ஆசிரியர்கள் தீர்மானித்திருக்கின்றனர்.

இதனால், சசகெச்சுவானில் மிகவும் பிரபலமான உயர் பாடசாலை கூடைப்பந்தாட்டப் போட்டிகள் பாதிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.







### கார் திருட்டுச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

ஜனவரி முதலாம் திகதி முதல் இது வரையான காலப்பகுதியில் 68 கார் திருட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

2023ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது, இது 106 சதவீத அதிகரிப்பு எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடத்தில் 12,200 வாகனத் திருட்டுச் சம்பவங்கள் பதிவாகியிருந்தன.



# அறுவர் படுகொலையில் உயிர் தப்பிய குடும்பத் தலைவர் கருத்துத் தெரிவிப்பு

ஒன்ராரியோ,மார்ச்19

ஒட்டாவாவில் இடம்பெற்ற அறுவர் படுகொலைச் சம்பவத்தில் தப்பிய தந்தை, தமக்கு வழுங்கிய ஆதரவிற்காக பொது மக்களிடம் நன்றி தெரிவித்துள்ளார்.

மார்ச் 17ஆம் திகதி ஒட்டாவாவில் இடம்பெற்ற இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர், ஒட்டாவா பொலிஸாரின் ஊடாக தனுஸ்க விக்ரமசிங்க இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

மார்ச் 6ஆம் திகதி, பார்ஹெவனில் அமைந்துள்ள வீட்டிற்குள் இருந்து தனுஸ்க விக்ரமசிங்கவின் மனைவியும், நான்கு பிள்ளைகளும், குடும்ப நண்பர் ஒருவரும் படுகொலை செய்யப்பட்டனர்.

தமது குடும்பத்தில் உள்ள அனைவரையும் இழந்தமையினால் தாம் கடுமையாக உடைந்துபோயுள்ளார் எனவும் தனுஸ்க தெரிவித்துள்ளார்.

முதல் பிரதிபலிப்பவர்கள், வைத்தியசாலை ஊழியர்களுக்கும் தனுஸ்க நன்றி தெரிவித்துள்ளார்.

கனடாவின் பௌத்த காங்கிரஸின் ஆதரவிற்கு தனுஸ்க நன்றியை பகிர்ந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபர் பெப்ரியோ டி சொய்சாவின் பெற்றோரும், இந்த செய்தியினால் இடிந்து போயுள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

சந்தேகநபர் தற்போது பாதுகாப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளார். மார்ச் 28ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். இந்த சம்பவத்திற்கான நோக்கம் குறித்து பொலிஸார் இதுவரை எவ்வித தகவல்களையும் வெளியிடவில்லை என்பது குறிப்பித்தக்கது.



# இம்முறை மிக மோசமான காட்டுத் தீயை பிரிட்டிஷ் கொலம்பியா எதிர் கொள்ளும்!

பிரிட்டிஷ் கொலம்பியா,மார்ச்19

பிரிட்டிஷ் கொலம்பியா இவ்வருடம் மிகவும் மோசமான காட்டுத் தீயை சந்திக்க நேரிடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இதனைத் தடுப்பதற்கு மாநிலத்திற்கு 40 தொடக்கம் 60 மில்லிமீற்றர்கள் வரையில் மழைவீழ்ச்சி தேவையாக விருப்பதாக, பிரிட்டிஷ் கொலம்பியா காட்டுத் தீ சேவைகளுக்கான செயற்பாடுகளின் பணிப்பாளர் கிளிப் செப்மேன் தெரிவித்துள்ளார்.

மாநிலத்தின் பல பகுதிகளிலும் வறட்சி நிலை நீடிப்பதாக செப்மேன் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, காட்டுத் தீ வந்தால், அதனை எதிர்கொள்வதற்கு தயாராகி வருவதாக மாநிலத்தின் வனத்துறை அமைச்சர் புரூஸ் ரோல்ஸ்டன் தெரிவித்துள்ளார். மேலதிக, ஹெலிக்கொப்டர்கள் மற்றும் கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன எனவும், புதிய தொழிநுட்பங்கள் பயன்படுத்தப்படவுள்ளன என்ச்வும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




# முன்னாள் நீதிபதி ஒருவரின் மீது கியூபெக்கில் ஊழல் குற்றச்சாட்டு

கியூபெக், மார்ச் 19

முன்னாள் நீதிபதி ஒருவரை ஊழல் குற்றச்சாட்டின் பேரில் கியூபெக் ஊழல் எதிர்ப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தாம் வழக்குகளை விசாரிப்பதற்காக செலவிட்ட நேரம் தொடர்பில் போலி பதிவுகளை மேற்கொண்ட குற்றச்சாட்டின் பேரில், கியூபெக்கின் தென் பகுதி நகரமான லோங்கியுல் மாநகர நீதிமன்றின் முன்னாள் நீதிபதி கைது செய்யப்பட்டுள்ளார்.

2016ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதல் 2019ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையான காலப்பகுதியில் தாம் வேலை செய்யாத நேரத்திற்காக 38,000 டொலர்களை போலியாக அவர் பெற்றுள்ளார் என ஊழல் எதிர்ப்புப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், தமது வீட்டிற்கு அருகில் உள்ள ஒருவரின் போக்குவரத்து விதி மீறல் விசாரணையில் கலந்து கொள்வதற்காக, விதிமுறைகளை மீறி விசாரணை திகதியை மாற்றினார் எனவும் அந்த நீதிபதி மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# கனடாவில் உறவினர்களைக் கொண்டுள்ள காசா வாசிகள் கனடா வருவதற்கு அனுமதி

ஒன்ராறியோ,மார்ச்19

கனடாவில் தமது உறவினர்களைக் கொண்டுள்ள – காசாவில் நெருக்கடியில் சிக்கியுள்ளவர்கள் – கனடாவிற்கு வருவதற்கு அரசாங்கம் அனுமதிக்கும் என குடிவரவு அமைச்சர் மார்க் மில்லர் தெரிவித்துள்ளார்.



குடும்ப ஒருங்கிணைப்பு விசா நிகழ்ச்சியினை கடந்த ஜனவரி மாதம் அரசாங்கம் அறிவித்திருந்தது.

கனடியப் பிரஜைகளின் பெற்றோரின் பெற்றோருக்கு, பெற்றோருக்கு, சகோதரர்களுக்கு, பேரப்பிள்ளைகளுக்கு தற்காலிக விசாவினை இந்த நிகழ்ச்சி வழங்குகின்றது.

இந்த நிகழ்ச்சியின் கீழ் 1,000 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என குடிவரவு அமைச்சு ஆரம்பத்தில் தெரிவித்திருந்தது.

இந்த எண்ணிக்கையை அரசாங்கம் அதிகரிக்கவுள்ளதாக அமைச்சர் மில்லர் குறிப்பிட்டுள்ளார்.

# கரிபூ வனத்தைப் பாதுகாக்க மத்திய அரசு தனது அதிகாரத்தைப் பிரயோகிக்குமாம்!

ஒன்ராறியோ,மார்ச்19

கியூபெக்கின் ஆபத்திற்குள்ளாகியுள்ள கரிபூ வனப்பகுதியைப் பாதுகாப்பதற்கு மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தை பயன்படுத்தப் போவதாக சுற்றுச்சூழல் அமைச்சர் ஸ்டீவன் கில்போட் எச்சரித்துள்ளார்.



மே மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் கரிபூ பாதுகாப்பு திட்டத்தை வெளியிடுமாறு கியூபெக் மாநில சுற்றுச்சூழல் அமைச்சரிடம், மத்திய அரசாங்கத்தின் சுற்றுச்சூழல் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கரிபூ வனப்பகுதியில் விலங்குகள் அழியும் நிலையில் இருப்பதால், அவற்றைப் பாதுகாப்பதற்காக மத்திய அரசு தமது அதிகாரத்தை பயன்படுத்த நேரிடும் என கில்போட் கூறியுள்ளார்.

கடந்த வருடத்தின் ஜுன் மாதத்தில் இந்த அறிக்கை வெளியாகும் என கியூபெக் அரசாங்கம் தெரிவித்திருந்த போதிலும், இதுவரை அறிக்கை வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# ஓய்வு வாழ்க்கையை கழிப்பதற்கு டொரன்டோ சிறந்த தெரிவு அல்ல

## கனேடியர்கள் ஆய்வில் தெரிவிப்பு

ஒன்ராரியோ, மார்ச்19

ஓய்வு வாழ்க்கையை கழிப்பதற்கு டொரன்டோ சிறந்த தெரிவு இல்லை என கனடியர்கள் கருதுகின்றனர் என ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது.

ஓய்வு பெறுவதற்கு கனடா பொருத்தமான நகரமா என்பது தொடர்பில் சுயாதீன ஆய்வு நிறுவனம் நடத்திய ஆராய்வின் முடிவுகள் மார்ச் 18ஆம் திகதி வெளியாகின.

பதிலளித்தவர்களில் 65 சதவீதமானோர் ஓய்வு பெறுவதற்கு டொரன்டோ நகரம் பொருத்தமானது இல்லை என்ற கருத்தைக் கொண்டிருந்தனர். 32 சதவீதமானவர்கள் பொருத்தமானதாக இல்லை எனத் தெரிவித்தனர்.3 சதவீதமானவர்கள் நிச்சயமாகத் தெரியவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.



# தாம் ஒன்ராரியோ மாநில முதல்வரானால் கார்பன் வரி ரத்து என்கின்றார் குரொம்பி

ஒன்ராரியோ,மார்ச்19

தாம் ஒன்ராரியோ மாநில முதல்வராக தெரிவு செய்யப்பட்டால் மாநில கார்பன் வரியை இரத்துச் செய்வதாக லிபரல் கட்சியின் ஒன்ராரியோ மாநிலத் தலைவர் பொனி குரொம்பி தெரிவித்துள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் லிபரல் கட்சியின் மாநிலத் தலைவராக தெரிவு செய்யப்பட்ட பொனி குரோம்பியிடம் கார்பன் வரி தொடர்பில் கட்சியின் நிலைப்பாடு என்னவென கேள்வி எழுப்பப்பட்டு வந்தது.

இதுவரை, கார்பன் வரி கொள்கை தொடர்பில் கருத்து தெரிவிக்காதிருந்த பொனி குரோம்பி முதல் முறை இந்தக் கருத்தினைத் இப்போது தெரிவித்துள்ளார்.